செ.வெ. எண்: 378 நாள்: 01–07–2012

## செய்தி வெளியீடு

மாற்றுத் திறனாளிகள் ஏற்றம் பெற வேண்டும் என்ற நோக்கத்தை எய்தும் வகையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 1993-ஆம் ஆண்டிலேயே ஊனமுற்றோருக்கான தனி இயக்ககத்தை ஏற்படுத்தியதோடு மட்டுமல்லாமல், 1994 ஆம் ஆண்டு மாற்றுத் திறனாளிகளுக்கென விரிவான மாநிலக் கொள்கையையும் வெளியிட்டார்கள்.

மாற்றுத்திறனாளிகள் சமூகத்தில் ஏனையோருக்கு இணையாக வாழ உதவும் வகையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அரசு அவர்களின் வாழ்க்கையில் ஒளியேற்றும் வகையிலான திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வருகிறது.

பூவிருந்தவல்லியில் பார்வையற்றோருக்கான அரசு மேல்நிலைப் பள்ளி ஒன்று 124 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டது. இப்பள்ளி வளாகத்தில் அரசு சார் நிறுவனங்களான பார்வையற்றோருக்கான தொழில் பயிற்சி மையம், பார்வையற்றோருக்கான அரசு பெண்கள் மறு வாழ்வு இல்லம், வட்டார ப்ரெய்லி அச்சகம், இடைநிலை ஆசிரியர் பயிற்சி மையம் மற்றும் பார்வையற்றோருக்கு கற்பிக்கும் ஆசிரியர் பட்டயப் பயிற்சி மையம் ஆகியவை இயங்கி வருகின்றன. இவைகள் மற்றும் பார்வையற்றோருக்கான அரசு மேல்நிலைப்பள்ளியும் பழுதடைந்துள்ளதைக் கருத்தில் கொண்டு, பூவிருந்தவல்லியில் அமைந்துள்ள பார்வையற்றோருக்கான அரசு மேல்நிலைப் பள்ளி வளாகத்தின் கட்டடங்களை சீரமைக்கவும் மற்றும் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ளவும் 2 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

இந்த நிதி உதவியின் மூலம், 1 கோடியே 50 லட்சம் ரூபாய் செலவில் பல்வகைகளில் பயன்படும் தங்கும் விடுதி (Multipurpose Hostel), 20 லட்சம் ரூபாய் செலவில் நவீன சமையலறை கட்டுதல் மற்றும் சமையல் அறை உபகரணங்கள் வாங்குதல், 10 லட்சம் ரூபாய் செலவில் பார்வையற்றோருக்கான பிரெய்லி அச்சுக் கூடம் பழுது பார்த்தல், 10 லட்சம் ரூபாய் செலவில் விளையாட்டு மைதானம் பழுது பார்த்தல் மற்றும் 10 லட்சம் ரூபாய் செலவில் அரசு பார்வையற்றோர் ஆசிரியர் பயிற்சிக் கூடம், நூலகம், ஆய்வுக் கூடப் பொருட்கள் வாங்குதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படும்.

********

வெளியீடு:- இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9
நாள் :- 1-7-2012.